**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை:- திரு. P. பாலமுருகன், B.Com., B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2023 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 03 ஆம் நாள் திங்கள்கிழமை**

**I.A.No.06/2023 In O.S.No.209/2016**

1) பொம்மக்காள்

2) சின்னம்மாள்

3) சின்னக்குஞ்சு

4) அப்பாநாயக்கர்

5) பொம்மாநாயக்கர் ..... மனுதாரர்கள்/1, 3 முதல் 6 பிரதிவாதிகள்

**/எதிர்/**

1) பாக்கியராஜ்

2) பெரிய பொம்மா நாயக்கர் (இறப்பு) ..... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு என் முன்பாக 28.06.2023 ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.M.சிவக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**ஆணையுரை**

அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் அழைக்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 17 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**

1. மனுதாரர் வழக்கின் 6 ம் பிரதிவாதி. தாவா அசல் வழக்கானது வா.சா.1 ன் குறுக்கு விசாரணைக்காக 20.07.2022 ம் தேதியன்று போடப்பட்டுள்ளது. அந்த தேதியில் மனுதாரரால் ஆஜராக முடியவில்லை. நோய்வாய்பட்டு, சின்னம்மை நோய் காரணமாக படுக்கையில் இருந்ததாலும், தனது செல்போனை

தொலைத்துவிட்டதாலும் வழக்கறிஞருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. மேற்கண்ட காரணங்களால் 20.07.2022 ம் தேதி மனுதாரரால் ஆஜராக முடியவில்லை என்றும், தன்னிடம் சரியான வழக்கு இருப்பதாகவும், தனது தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வா.சா1ஐ மீண்டும் அழைக்கப்படவேண்டும் என்றும், இதே பிரச்சனை தொடர்பாக மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் ஒரு ரிட் மனு நிலுவையில் உள்ளது என்றும், மேற்படி ரிட் மனுவை தாக்கல் செய்த பின்னர் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும், எனவே, வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் அழைக்க வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>**

2. இம்மனு நிலைக்கக்கூடியது அல்ல. ஏற்கனவே வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய கோரி இ.ம.எண்.04/2022 தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு வா.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மீண்டும் மனுதாரர் தரப்பில் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்யக்கோருவது ஏற்புடையதல்ல. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை.

4. தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. தாவா அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் அழைக்க வேண்டுமென்று மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா அசல் வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக உள்ளது என்றும், மனுதாரர் தரப்பில் இ.ம.எண்.04/2022 தாக்கல் செய்யப்பட்டு வா.சா.1 ஏற்கனவே மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்றும், மீண்டும் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்யக்கோருவது ஏற்புடையதல்ல என்றும்,

வழக்கு நடவடிக்கைகளை காலம் கடத்தவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டது.

6. வா.சா.1 முதல் விசாரணை சாட்சியம் 16.03.2020ம் தேதி முடிக்கப்பட்டு வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வழக்கானது நிலுவையில் இருந்து வந்த நிலையில் வழக்குரையில் திருத்தம் மேற்கொண்டும் மீண்டும் 30.03.2021 முதல் வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக இருந்த நிலையிலும், வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்த நிலையிலும் மனுதாரர் தரப்பில் பலமுறை கால அவகாசம் கேட்டும், கால அவகாசம் வழங்கப்பட்டும் உள்ள நிலையில் மேற்கொண்டும் வா.சா1 ஐ குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர் தரப்பில் முன் வராத காரணத்தால் 20.07.2022ம் தேதி வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது. பின்னிட்டு மனுதாரர் தரப்பில் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி இ.ம.எண்.04/2022 தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் 14.11.2022ம் தேதி வா.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

7. வாதிகள் தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக 13.02.2023, 17.02.2023, 23.02.2023, 06.03.2023, 09.03.2023, 14.03.2023, 17.03.2023, 20.03.2023, 23.03.2023, 29.03.2023, 31.03.2023, 10.04.2023, 12.04.2023 மற்றும் 18.04.2023 ஆகிய தேதிகளில் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் வா.சா.1ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கினை மறுதிறப்பு செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கானது கடந்த 2016ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருகிறது. வா.சா.1ன் முதல் விசாரணை 16.03.2020ம் தேதி முடிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்காக 24.03.2020ம் தேதி முதல் நிலுவையில் இருந்து வந்துள்ளதும், 2ம் வாதி இறந்துவிட்டதால் பிராதில் திருத்தம் செய்யப்பட்டும் மீண்டும் வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வாய்ப்புகள் மனுதாரருக்கு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய முன்வராத காரணத்தால் வா.சா.1ன் குறுக்கு விசாரணை 20.07.2022ம் தேதி இந்நீதிமன்றத்தால் முடித்துக்கொள்ளப்பட்டுள்ளது. மீண்டும் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர் தரப்பில் இ.ம.எண்.04/2022 தாக்கல் செய்யப்பட்டு நிபந்தனையுடன் மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு 14.11.2022ம் தேதி

மனுதாரர் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக 14 வாய்தாக்கள் வழங்கப்பட்ட பின்னர் மீண்டும் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் அழைக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. பொதுவாக ஒரு வழக்கில் இருதரப்பிற்கும் போதுமான வாய்ப்புகள் வழங்கி வழக்கினை இறுதியாக முடிவு செய்திட வேண்டும் என்பது இயற்கை நீதியாகும். வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர் தரப்பிற்கு பல்வேறு வாய்ப்புகள் வழங்கப்பட்டும், வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய முன்வராத காரணத்தால் வா.சா.1ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மனுதாரர் தரப்பில் இ.ம.எண்.04/2022 தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தால் நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டு ஏற்கனவே வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்துள்ளனர். நீதியின் நலன் கருதியும், இயற்கை நீதியின் பாலும் மனுதாரருக்கு மேலும் ஒரு வாய்ப்பினை வழங்கும் பொருட்டு பின்வரும் நிபந்தனைகளுடன் இம்மனுவை அனுமதிப்பது என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

<u>முடிவாக,</u>

மனுதாரர் வா.சா.1ற்கு செலவுத்தொகையாக ரூ.2,000/- ஐ 10.07.2023ம் தேதிக்குள் வழங்க வேண்டும் என்றும், வா.சா.1 நீதிமன்றத்தில் முன்னிலையாகும் தினத்தில் மனுதாரர் தரப்பில் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடி ஆகும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2023ம் ஆண்டு ஜுலை திங்கள் 03ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

**Sd/- P. பாலமுருகன்**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**

| | | |
|---|---|---|
| **மனுதாரர்கள் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |

**Sd/- P. பாலமுருகன்**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**